# கனடாவின் குற்றச்சாட்டை நிராகரித்தது இந்தியா

செப்டம்பர் 19, 2023

கனடா பிரதமர் அவர்கள் பாராளுமன்றத்தில் கூறியதையும், அவர்களின் வெளிவிவகார அமைச்சரின் அறிக்கையையும் நாங்கள் பார்த்து நிராகரித்தோம்.

கனடாவில் எந்த ஒரு வன்முறைச் செயலிலும் இந்திய அரசின் தலையீடு இருப்பதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகள் அபத்தமானது மற்றும் உள்நோக்கம் கொண்டது.

இதே போன்ற குற்றச்சாட்டுகள் கனடா பிரதமரால் நமது பிரதமரிடம் முன்வைக்கப்பட்டன. அவை முற்றிலும் நிராகரிக்கப்பட்டன.

நாங்கள் சட்டத்தின் ஆட்சிக்கு வலுவான அர்ப்பணிப்புடன் கூடிய ஜனநாயக அரசியலைக் கொண்ட நாடு.

இத்தகைய ஆதாரமற்ற குற்றச்சாட்டுகள், கனடாவில் அடைக்கலம் அளித்து, இந்தியாவின் இறையாண்மை மற்றும் பிராந்திய ஒருமைப்பாட்டை தொடர்ந்து அச்சுறுத்தும் காலிஸ்தானி பயங்கரவாதிகள் மற்றும் தீவிரவாதிகளிடம் இருந்து கவனத்தை திருப்ப முயல்கின்றன. இந்த விசயத்தில் கனடா அரசாங்கத்தின் செயலற்ற தன்மை நீண்டகால மற்றும் தொடர்ச்சியான கவலையாக உள்ளது.

கனடா அரசியல் பிரமுகர்கள் இத்தகைய நபர்களுக்கு வெளிப்படையாக அனுதாபத்தை வெளிப்படுத்தியிருப்பது ஆழ்ந்த கவலைக்குரிய விஷயமாகவே உள்ளது.

கனடாவில் கொலைகள், மனித கடத்தல் மற்றும் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றச்செயல்கள் உள்ளிட்ட பல்வேறு சட்டவிரோத நடவடிக்கைகளுக்கு இடம் கொடுக்கப்பட்டிருப்பது புதிதல்ல.

இதுபோன்ற விஷயங்களுடன் இந்திய அரசாங்கத்தை இணைக்கும் எந்த முயற்சியையும் நாங்கள் நிராகரிக்கிறோம்.

தங்கள் மண்ணில் இருந்து செயல்படும் அனைத்து இந்திய விரோத சக்திகளுக்கும் எதிராக விரைவான மற்றும் பயனுள்ள சட்ட

நடவடிக்கை எடுக்குமாறு கனடா அரசாங்கத்தை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம்.

**புது தில்லி**
**செப்டம்பர் 19, 2023**